பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 111

15.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற சிறப்பு தர போர்மேன் கைது

புகார்தாரர் திருமதி.பர்வீன் பானு, திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது சகோதரரின் வீட்டிற்கு மேலாக செல்லும் மின்பாதையை மாற்றி அமைக்கவும் மற்றும் புதிய மின் இணைப்பு பெறவும் திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் உள்ள தமிழ்நாடு மின் பகிர்மான கழக உதவிப் பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். மின்பாதையை மாற்றி அமைக்கவும் மற்றும் புதிய மின் இணைப்பு வழங்குவதற்காக திரு.சிவக்குமார், சிறப்பு தர போர்மேன், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பத்தூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 15.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சிவக்குமார், சிறப்பு தர போர்மேன் அவர்கள் ரூ.10,000/- லஞ்ச பணத்தை புகார்தாராரிடமிருந்து கூகுல்பே மூலமாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 111
15.10.2026

SPECIAL GRADE FOREMAN TNPDCL ARRESTED FOR BRIBE

The complainant, Tmt.Parveen Banu, a resident of Ambur, Thirupathur District, had applied for a new electricity service connection and for the shifting of an electric power line passing over her brother's house at the Office of the Assistant Engineer, Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Ambur, Tirupathur District. Tr.Sivakumar, Special Grade Foreman, TNPDCL, Ambur, Thirupathur District, demanded a bribe of Rs.10,000/- from the complainant for providing new electricity service connection and shifting the power line passing over her brother's house. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thirupathur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (15.10.2026). During trap proceedings, Tr.Sivakumar, Special Grade Foreman demanded and accepted the bribe amount of Rs.10,000/- from the complainant through a GPay transaction to his bank account. The accused was arrested and sent to judicial custody.